**இலங்கை ஹதபிம அதிகாரசபை (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காலப்பகுதியில் கையேற்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி, அப்பெறுமானத்தில் அரச மூலதன மானியங்கள் மூலம் பெற்றுக்கொண்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் அதிகாரசபையின் பணத்திலிருந்து காடுப்பனவு செய்த பெறுமதி ஆகிய விபரங்கள் குறிப்பாக அல்லது நிதிக் | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 4,384,829 ஆன சொத்துக்கள் தொடர்பாக இத் தேவைப்பாட்டின் பிரகாரம் தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் நியாயமான பெறுமதி அதன் காணப்படும் புத்தக பெறுமதியிலிருந்து பொருண்மையாக வேறுபடும் போது சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 245,047 பெயரளவுப் பெறுமதியின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த விவசாய உபகரணங்கள் மேலும் பயன்படுத்தப்பட்டு வந்த போதும் அச்சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக் கப்பட்டிருக்கவில்லை. | அம் மீள்மதிப்பீட்டுச் செயற்பாடு 2022 மார்ச் 25 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் அதிகார சபைக்கு கிடைத்துள்ளதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் 28 ஆம் பந்தியின் பிரகாரம் பொருட்கள் விற்பனையால் வரும் வருமானங்களை இனங்காண்பதற்காக நிறுவனத்தின் பொருட்கள் உரித்தின் ஆபத்து மற்றும் நலன்கள் கொள்வனவாளருக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளர் ஒருவருக்கு வழங்கப்படாதிருந்த ரூபா 1,417,200 ஆன விவசாய உற்பத்திகள் பெறுமதியொன்று கடன் விற்பனை வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் விற்பனையால் கிடைத்த விளைவுகள் தொடர்பாக இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப் பட்டிருந்த 2 கணக்கு மீதிகளை மீளாய்வாண்டின் போது முன்கொண்டு வரும் போது அவற்றின் பெறுமதி ரூபா 1,144,056 தொகை கூடுதலாக பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த | 2022 ஆம் ஆண்டின் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக | முன்னைய ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு மீதிகள் சரியாக முன் கொண்டு வரப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதும் இவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் கணக்காய்விற்குச் விளக்கப்படவில்லை. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவிற்கு செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 54,911,756 தொகையொன்று காட்டப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அதற்கு சமனான செலுத்த வேண்டிய மீதியொன்று காண்பிக்கப்பட்டிருக் வில்லை. எனினும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து ரூபா 2,094,280 தொகையொன்று அதிகாரசபைக்கு பெற வேண்டியதாக காட்டப்பட்டிருந்ததுடன் அம் மீதி 1998 ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டு வந்தது. இவ்வேறுபட்ட நிலைமை தொடர்பாக ஆராய்ந்து நிதிக்கூற்றுக்களில் சரியான நிலைமையை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,094,280 தொகையை பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபையின் பரிந்துரை கிடைத்துள்ளதாகவும் அந்த ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய ரூபா 54,911,756 தொகையை நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவு செய்வதாக. | பெற வேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதி ரூபா 20,444,454 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 16,807,719 தொகை ஓராண்டிற்கும் மேற்பட்ட காலமாகக் காணப்படும் மீதியாக இருந்தது. | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதாக | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை ஹதபிம அதிகார சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட விற்பனை பிரிவிற்கு வழங்குனரால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட பொருட்களுக்காக மோசடியாக இரண்டு தடவை பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை தொடர்பாக | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனையின் பரிந்துரை அறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை 2,116,410 ஆக இருந்தது. அதில் ரூபா 844,251 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,272,159 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,866,005 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,152,732 தொகை ஓராண்டிற்கும் மேற்பட்ட செலுத்த வேண்டியதாக இருந்தது.. | தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | உடன்படிக்கை பிரகாரம் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.3(ஆ) வழிகாட்டி | ரூபா 500,000 மிகைக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுக்கல் வாங்கல் தொடர்பாக முறையான எழுத்துமூல ஒப்பந்த மொன்றுக்கு வருவது அவசியமாக இருந்த போதும் அந்த எல்லையை மிகைத்து வழங்கல் ரூபா 832,065 தொடர்பாக எழுத்துமூல உடன்படிக்கை யொன்றுக்கு வந்திருக்கவில்லை. | வழங்குனரால் உத்தரவாத காலமொன்று வழங்கியமையால் உடன்படிக்கை யொன்று செய்யப்படவில்லை | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை பின்பற்றப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை ஹதபிம அதிகாரசபையின் முகாமைத்துவ | நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முக | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறை யின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| உதவியாளர் (தொழில்நுட்பம்) உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.3(ii) ஆம் பந்தி | பரீட்சையின் போது கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோருக்கு இடையே திறமை அடிப்படையில் தகைமையுடையோரை தெரிவுசெய்து நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும் நடாத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் போது கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட முதலாவது முன்னுரிமையிலிருந்து 4 ஆவது முன்னுரிமை வரையான முன்னுரிமை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு நியமனங்களை வழங்காமல் முன்னரிமை 7, 14 மற்றும் 18 (18 இன் கீழ் இரண்ட விண்ணப்பதாரிகள் உள்ளனர்.) பெற்றுக் கொண்ட 4 விண்ணப்பதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் நேர்முக சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திறமை வரிசையை கருத்திற் கொள்ளாமல் வழங்கப்பட்டிருந்தன. | | ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வலய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.3.3(1) ஆம் பந்தி | நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் போது கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோருக்கு இடையே திறமை அடிப்படையில் தகைமையுடையோரை தெரிவுசெய்து நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும் நடாத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் போது கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட முதலாவது முன்னுரிமையை பெற்றவருக்கு வழங்காமல் 6 ஆவது முன்னுரிமை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிக்கு வலய உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நேர்முக பரீட்சை குழுவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திறமை வரிசையை கருத்திற் கொள்ளாமல் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறை யின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 188(2) | வாடிக்கையாளர்களால் நேரடியாக வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படும் தொகைக்குரிய கொடுக்கல் வாங்கல்களை இனங் காண்பதற்கும் அதன் பிரகாரம் கணக்கு வைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 80 சந்தர்ப்பங்களில் இரண்டு வங்கிக் கணக்குகளில் அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட ரூபா 625,340 தொகை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் துரிதமாக சீராக்கம் செய்வதாக | வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட பணத்தை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 396 மற்றும் | வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறான 163 காசோலைகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்காசோலைகளில் ரூபா 1,229,966 இற்குரிய 147 காசோலைகள் 2020 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தன. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 18,878,424 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,059,573 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,818,851 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் அரச மானியம் ரூபா 72,534,000 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பள்ளேகல பண்ணை ரூபா 1,412,013 தொகையும் கொத்மலே பண்ணை ரூபா 3,130,475 உம் நட்டம் அடைந்திருந்தது. விற்பனை வருமானத்தை மிகைத்து செயற்பாட்டு செலவினம் அதிகரித்தமை இவ்வாறு பண்ணை நட்டமடைவதற்கு காரணமாக இருந்தது. | குறிப்பிடப்பட்டிருந்த தகவல்களுடன் இணங்க முடியவில்லை. | வருமானம் மற்றும் செலவினம் திட்டமிடப்பட்டு முகாமை செய்யப்பட வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்ன் போது சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நலனாலி களுக்காக வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட மண்வெட்டி, முள்ளு சவல், பூ வாளி மற்றும் ரெக் ஒன்று வீதம் ரூபா 7,516,260 ஆன 1860 உபகரணத் தொகுதிகள் 2022 சனவரி 25 ஆந் திகதி வரையிலும் நலனாலிகளுக்கு வழங்கப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டின் போது 10680 குடும்பங்களுக்காக அந்த உபகரணங்களை வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 19,951,656 பெறுமதியான விவசாய உபகரணங்களும் 2022 சனவரி 25 ஆந் திகதி வரையிலும் நலனாலிகளுக்கு வழங்கப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. அந்த விவசாய உபகரணங்களுக்கு இடையே 2670 மண்வெட்டிகள் 6102 மண்வெட்டி முள்ளுகள் 6102 சவல்கள் 5929 பூ வாளிகளும் இருந்தன. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | குண்டசாலையில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்திற்குரிய காணியொன்றில் ரூபா 4,464,521 தொகை செலவு செய்து 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட விற்பனைக் கட்டிடத்திற்காக நீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்குவதற்காக விவசாயத் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படா திருந்ததுடன் பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக எதிர்ப்பினை தெரிவித்திருந்தமையால் | விவசாயத் திணைக்களத்துடன் இணக்கப்பாடொன்றுக்கு வந்து இக்கட்டிடத்தில் வருமான உழைப்பதற்கான நடைமுறையொன்றுக்காக பயன்படுத்தும் தேவைப்பாடு தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் இது தொடர்பாக எழுத்துமூல வேண்டுகோலொன்று விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | அரசின் பணத்தை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

அக்கட்டிடம் பயன்பாடற்றுக் காணப்பட்டது.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபைக்குரிய ரூபா 1,000,000 ஆன கெப் வண்டியொன்றும் ரூபா 195,000 பெறுமதியான கை உழவு இயந்திரமொன்றும் 3 ஆண்டுகளாக பயன்படுத்தாமல் காணப்பட்டன. | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது அவ்வாறு செய்ய முடியாவிட்டால் ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதாக | நிறுவனத்தின் சொத்துக்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 ஏனைய அமைப்புக்களின் வளங்களைப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கன்னோருவையில் அமைந்துள்ள அதிகாரசபையின் கட்டிடம் மற்றும் காணி, 5 ஏக்கர் அளவிலான கொத்மலே காணி மற்றும் 10 ஏக்கர் அளவிலான பள்ளேகல பண்ணை அமைந்துள்ள அரசின் காணியை அதிகாரசபைக்கு கையேற்கப்படாமல் பயன்படுத்தப்பட்டு வந்தது. | முறையாக அதிகாரசபைக்கு கையளிக்கப்படாதிருந்த தலைமை அலுவலக வளவு, பள்ளேகலே மற்றும் கொத்மலே பண்ணைகளை அதிகாரசபைக்கு கையேற்பதற்கு தற்போது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபையால் பயன்படுத்தப்படும் இந்த சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 மனித வளமுகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் பண்ணைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்றை ஏற்படுத்தாமல் ஹதபிம அதிகாரசபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 12 பேரை ஈடுபடுத்தி பண்ணை செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | தேவைப்பாட்டின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்பவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 6.5.3 பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகள் தொடர்பாக அத்தேவைப்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய காலப் பகுதியில் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1978 பெப்ரவரி 01 ஆந் திகதிய 302/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் அதிகாரசபையால் ஆகக்கூடிய விளைச்சலையும் சுற்றாடலைப் பாதுகாக்கும் வகையில் காணி மற்றும் நீர் வளங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த சில ஆண்டுகளின் செயற்பாடுகளின் பிரகாரம் அதற்காக போதியளவு கவனமொன்று செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அதிகாரசபைக்கு கிடைத்திருந்த நிதி ஏற்பாடுகளின் அளவின் பிரகாரம் இச்செயற்பாடுகள் திட்டமிடப்படுவதாக | அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக திட்டமிட்டு செயற்பட வேண்டும். |